# பல்கலைக்கழக வைத்தியசாலை
# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

## நிரந்தர ஊழியர்களுக்கான பதவி வெற்றிடங்கள்

பல்கலைக்கழக வைத்தியசாலை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழத்தில் பின்வரும் பதவிகளுக்காக தகுதிவாய்ந்த நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது:

## வைத்திய அதிகாரி பதவிகள் (Post of Medical Officer)

**1. வைத்திய அதிகாரி – தரம் I**

**தகைமைகள்:**

i. வைத்திய அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவை உடைய மருத்துவ அதிகாரி.

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனமொன்றில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் " தனியார் வைத்தியசாலைகள், தாதியர் இல்லங்கள், மற்றும் மகப்பேற்று இல்லங்கள் " என்ற வகுதிக்குள் அடங்கும் பதிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளில் தரம் II மருத்துவ அதிகாரியாக குறைந்தது ஆறு (06) வருடகால அனுபவம்.

அத்துடன்

iii. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.10.11 திகதிய இல:1883/17 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டப்படிப்புத் தகைமை.

அத்துடன்

iv. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழை (Certificate of Good Standing) ஐ கொண்டிருத்தல்.

**வயதெல்லை:**

25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:**

MO 1-1 ரூ. (58,675 - 3 x 1,375 - 7x 1385 – 2 x 1,910 – 10 x 2,270 - 99,015)

* தரம் I வைத்திய அதிகாரிகள் MO 1-1 ரூ. 78,585.00 இன் 14 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர் + ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

2. **வைத்திய அதிகாரி – தரம் II**

**தகைமைகள்:**

i. மருத்துவ அதிகாரியாக செயற்படுவதன் பொருட்டு இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய மருத்துவ அதிகாரியாக இருத்தல்.

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனமொன்றில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் “ தனியார் வைத்தியசாலைகள், தாதியர் இல்லங்கள், மற்றும் மகப்பேற்று இல்லங்கள் ” என்ற வகுதிக்குள் அடங்கும் பதிவுசெய்யப்பட்ட வைத்தியசாலைகளில் மருத்துவ அதிகாரியாக குறைந்தது இரு (02) வருடகால அனுபவம்.

அத்துடன்

iii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழை (Certificate of Good Standing) ஐ கொண்டிருத்தல்.

**வயதெல்லை:**

25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:**

MO 1-1 ரூ. (58,675 - 3 x 1,375 - 7x 1385 – 2 x 1,910 – 10 x 2,270 - 99,015)

* தரம் II வைத்திய அதிகாரிகள் MO 1-1 ரூ. 64,185.00 இன் 5 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர் + ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

3. **வைத்திய அதிகாரி – ஆரம்பத் தரம்**

**தகைமைகள்:**

i. மருத்துவ அதிகாரியாக செயற்படுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய மருத்துவ அதிகாரி.

அத்துடன்

ii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழை (Certificate of Good Standing) ஐ கொண்டிருத்தல்.

**வயதெல்லை:**

25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:**

MO 1-1 ரூ. (58,675 - 3 x 1,375 - 7x 1385 – 2 x 1,910 – 10 x 2,270 - 99,015)

* ஆரம்பத்தர வைத்திய அதிகாரிகள் MO 1-1 ரூ.60,050.00 இன் 2 ஆம் படி நிலையில் வைக்கப்படுவர் + ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

## தாதியர் பதவிகள் (Post of Nursing Staff)

### 1. தாதிய உத்தியோகத்தர் - தரம் I (Nursing Officer)

**தகைமைகள்:**

i. தரம் I அல்லது தரம் II தாதிய உத்தியோகத்தராக இருக்க வேண்டும்.

அத்துடன்

ii. 2வது வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

iii. அனைத்து சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் அத்துடன் தொடர்ச்சியான 05 வருட அண்மித்த காலப்பகுதியில் திருப்திகரமாக சேவையாற்றிருத்தல்.

அத்துடன்

iv. அங்கீகரிக்கப்பட்ட வினையாற்றுகை நடவடிக்கை முறைக்கு ஏற்ப பதவியுயர்வுக்கு முன்னரான 05 வருடகாலத்தில் திருப்திகரமாக வினையாற்றுகை செய்திருத்தல்.

**வயதெல்லை:**

25 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:**

MT - 7 ரூ. (33,295 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 5x 750 – 59,805 )
* தாதி உத்தியோகத்தர் தரம் I MT - 07 , ரூ. 45,735 இன் 23 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர் + ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

### 2. தாதிய உத்தியோகத்தர் - தரம் III (Nursing Officer)

**தகைமைகள்:**

i. தாதியல் BSc பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து அல்லது சுகாதார அமைச்சிலிருந்து தாதியல் டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ.த) உயிரியல் அல்லது கணிதம் அல்லது விவசாய பாடத்துறையில் (பொது அறிவு பரீட்சை உள்ளடங்காமல்) அனைத்துப் பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தி எய்திருத்தல் அல்லது குறிப்பிட்ட துறைகளில் பழைய பாடத்திட்டத்தில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி எய்திருத்தல்.

அத்துடன்

iii. க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு அமர்வுக்கு மேற்படாமல் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சிங்களம்/தமிழ்மொழி பாடங்களில் நான்கு (04) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

**வயதெல்லை:**

22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:**

MT - 7 ரூ. (33,295 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 5x 750 – 59,805 )
* தாதி உத்தியோகத்தர் தரம் III MT - 7 , ரூ. 33,295 இன் 1 ஆம் படிநிலையில் வைக்கப்படுவர் + ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

## துணை மருத்துவ சேவை (Post of Paramedical Staff)

1. **மருந்தாளர் - தரம் III (Pharmacist)**

**தகைமைகள்:**

i. க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்களுடன் (04) திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆங்கிலம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ/த) இரசாயனவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், பௌதீகவியல், அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி எய்திருத்தல்.

அத்துடன்

iii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து அல்லது நிறுவகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மருந்தியல்/ விஞ்ஞானம் (மருந்தியல்) பட்டம்.

அல்லது

iv. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் மருந்தாக்கவியல் தொடர்பான முழு நேர இரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

v. மருந்தாளராக பணியாற்றுவதற்காக இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல்.

அல்லது

vi. விண்ணப்பதாரி வெளிநாட்டுப் பட்டத்தைப் பெற்றிருந்தால் இலங்கையில் மருந்தாளராக பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**

22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் :**

MT – 6 ரூ. (32,850 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10x 750 – 59,360 )
* மருந்தாளர்கள் - தரம் III MT 6 ரூ. 32,850 இன் 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவார்கள் + ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

## 2. கதிரியக்கவியலாளர் - தரம் III (நோயறிதல்) (Radiographer - Diagnosis)

**தகைமைகள்:**

i. க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், சிங்களம்/தமிழ் மொழி பாடங்கள் அடங்கலாக நான்கு (04) திறமைச்சித்திகளுடன் இரு தடவைக்கு மேற்படாத அமர்வில் ஆங்கிலம் உட்பட (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

அத்துடன்

ii. க.பொ.த (உ/த) பௌதீகவியல் பாடத்தில் திறமைச்சித்தியுடன் இணைந்த கணிதம், உயிரியல், இரசாயனவியல் அல்லது விவசாயம் ஆகிய ஏதேனும் இரு பாடங்கள் அடங்கலாக ஒரே அமர்வில் சித்தி எய்திருத்தல்.

அத்துடன்

iii. a. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்குவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவகம் ஒன்றிலிருந்து கதிரியக்க (நோயறிதல்) / கதிரியக்கவியல் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

b. சுகாதார அமைச்சால் நடாத்தப்படும் கதிரியக்கம் நோயறிதல் தொடர்பான இரு வருட டிப்ளோமா பாட நெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

iv a. கதிரியக்கவியலாளராக (நோயறிதல்) பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் (SLMC) பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

b. விண்ணப்பதாரி வெளிநாட்டுப் பட்டத்தைப் பெற்றிருந்தால் இலங்கையில் கதிரியக்கவியலாளராக (நோயறிதல்) பணியாற்றுவதற்கு இலங்கை மருத்துவச் சபையின் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**

22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் :**

MT – 6 ரூ. (32,850 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10x 750 – 59,360 )
* கதிரியக்கவியலாளர் - தரம் III நோயறிதல் MT 6 - ரூ.32,850 இன் 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர் + ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

### 3. பேச்சு சிகிச்சையாளர் - தரம் III (Speech Therapist)

**தகைமைகள்:**

i. பல்கலைக்கழக மானியக் குழு அல்லது பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் இருந்து இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத பேச்சு சிகிச்சையில் முழுநேர டிப்ளோமாவை பெற்றிருக்க வேண்டும்.

**வயதெல்லை:**

22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் :**

MT – 6 ரூ. (32,850 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10x 750 – 59,360 )

* பேச்சு சிகிச்சையாளர் - தரம் III MT 6 - ரூ.32,850 இன் 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர் + ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

## <u>நிர்வாக பதவிகள் (Administration Posts)</u>

### 1. மக்கள் தொடர்பு அலுவலகர் - தரம் II (Public Relation Officer)

**தகைமைகள்:**

i. பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட மக்கள் தொடர்பு (Public Relation) / மனித வள முகாமைத்துவம் / வெகுஜன ஊடகம் (Mass Media) ஆகியவற்றில் பட்டம் ஒன்றை பெற்றிருக்க வேண்டும்.

**வயதெல்லை:**

22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் :**

JM 1- 1 ரூ. (42,600 – 10 x 755 – 18 x 1,135 – 70,580)

* மக்கள் தொடர்பு அலுவலகர் - தரம் II JM 1-1 - ரூ. 42,600 இன் 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர் + ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

### 2. சந்தைப்படுத்தல் அதிகாரி - தரம் II (Marketing Officer)

**தகைமைகள்:**

i. பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் / வணிக முகாமைத்துவம் ஆகியவற்றில் பட்டம் ஒன்றை பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

ii. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பட்டய கணக்காளர் நிறுவனத்தில் இருந்து சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் / வணிக முகாமைத்துவம் என்பவற்றில் இடைநிலைத் தேர்வில் (Intermediate Examination) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**வயதெல்லை:**

22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் :**

JM 1- 1 ரூ. (42,600 – 10 x 755 – 18 x 1,135 – 70,580)
* மக்கள் தொடர்பு அலுவலகர் - தரம் II JM 1-1 - ரூ. 42,600 இன் 1 ஆம் சம்பளப் படிநிலையில் அமர்த்தப்படுவர் + ஏனைய அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்.

**பொது நிபந்தனைகள்:**

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ii. பல்கலைக்கழக நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படும் எந்ததொரு பிரதேசத்திலும் அத்துடன் பல்கலைக்கழக வைத்தியசாலை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழத்தில் பதவிக்குரித்தான கடமைகளை புரியும் பொருட்டு உடல் உள வலிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

iv. விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

v. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் ஆரம்ப தர – மருத்துவ துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய விசேட தரப்பதவிகள் அல்லாதவர்கள் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன், ஏனைய விசேட தரப்பதவிகள் மற்றும் அரசாங்க சேவையிலுள்ள மருத்துவ அதிகாரி தரம் I, மருத்துவ அதிகாரி தரம் II, ஆகியோர் ஒரு (01) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.

vi. ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) ஊழியர் 10 % பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் பல்கலைக் கழகத்தினால் 15 % ம் , 03 % ஊழியர் நம்பிக்கை நிதிக்கு (ETF) பல்கலைக்கழகத்தினால் பங்களிப்பும் செய்யப்படும்.

vii. சரியாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டு “ நிறைவேற்றுப் பணிப்பாளர், பல்கலைக்கழக வைத்தியசாலை, ஜெனரல் சேர் ஜோன் கொத்லாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், வேரஹெர” என்ற முகவரிக்கு 2023.02.21 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பித்த பதவியை கடித உறையின் இடதுபக்க மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

viii. எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுத்து பட்டியலிடுவதற்கான உரிமையை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.

ix. சரியாக பூரணப்படுத்தப்படாத அல்லது காலதாமதமாகி அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களும் குறிப்பிடப்பட்டதற்கிணங்க தயாரித்து அனுப்பாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

x. விண்ணப்ப படிவம் மற்றும் ஏனைய தகவல்களை பின்வரும் வலையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். (www.kdu.ac.lk)